சிவமயம்



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும்
சோடாக்கம்பனி ஒழுங்கை மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி சந்திரகுமாரி விஜயகுமார்

அவர்களின்
சிவபதப் பேறு குறித்த

# நினைவு வெளியீடு

11-07-2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும்
சோடாக்கம்பனி ஒழுங்கை மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி சந்திரகுமாரி விஜயகுமார்

அவர்களின் சிவபதப் பேறு குறித்த

# நினைவு வெளியீடு

11-07-2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பிற்கு உறைவிடமாய்

நட்பிற்கு இலக்கணமாய்

பண்பினில் உயர்ந்து

எங்கள் குலத்தின்

விளக்கே ஆகி

மாண்புறு மனையறம் காத்து

அறம் பல புகட்டி அறிவுரை தந்த

தெய்வத் தாயின்

தியாகம் குறித்தும்

சீர்மிகு தொண்டுகள் குறித்தும்

எல்லோர் அன்பும் நிறைந்த

நினைவு மலரை

பாதக் கமலங்களில்

சமர்ப்பிக்கின்றோம்.

-குடும்பத்தினர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தோற்றம்
-
28
-
07
-
1952

மறைவு
-
11
-
06
-
2012

அமரர்

# திருமதி.சந்திரகுமாரி விஜயகுமார்

## திதி வெண்பா

ஆண்டதுவாம் நந்தனத்தில் வைகாசிப்பஞ்சமியில்
நீண்ட புகழ் சந்திரகுமாரியவர் - வேண்டியபழ
விண்ணுலகம் நோக்கி விரைந்தார் நிலையாக
மண்ணில் இருந்தார் எவர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

திருவுங் கல்வியும் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகுமாழத்துப் பிள்ளையைப் பேணுவோம்

## பஞ்சபுராணம்

### தேவாரம்

மானினேர் விழிமாதராய் வழுதிக்குமா பெருந்தேவிகேள்
பானல்வா யொருபாலனீங் கிவனென்று நீ பரிவெய்திடேல்
ஆனைமா மலையாதியா யவிடங்களிற் பலவல்லல் சேர்
ஈனர்கட் கெளியேனலேன் றிருவாலவா யரனிற்கவே.

### திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன் விரையார் கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே.

### திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளருள்ளத் தானந்தக் கனியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பலமாட ரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமை மாணவாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே!

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

காலனிடத் தணுகாதே காசினியிற் பிறவாதே
சீல வகத் தியஞான தேனமுதைப் தருவாயே
மாலயனுக் கரியானே மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே நாககிரிப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெலாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி சந்திரகுமாரி விஜயகுமார் அவர்களின் வாழ்க்கை வரலாறு

தந்தை - நடராசா

தாய் - மங்கையற்கரசு

பிறப்பு - 1952-07-28

உடன்பிறந்தோர் -

1. யோகராசா
2. சந்திரகாந்தி
3. சிறீபாலன்
4. சந்திரகுமாரி
5. சந்திரவதனா
6. மதிவதனா

கல்வி - யாழ் - கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலை

திருமணம் - பாலசிங்கம் விஜயகுமார் (1977-10-30)

பிள்ளைகள் -

01. கவிதா

02. சுமன்

02. கஜன்

மருமக்கள் -

01. தயானந்தன்

02. சுகன்யா

03.தர்மினி

பேரப்பிள்ளைகள் -

01. அபிநயன்

02. பிரவீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித வடிவில் தாயெனும் தெய்வம்!

தாயிற் சிறந்த கோயிலும் இலையெனச்
சாற்றிய அம்மொழி செம்மொழி ஆகும்!
தன்னலம் என்ற ஒன்றை நோக்காதே
குடும்ப நலமே நலமெனக் கொள்ளும்
தாயின் வடிவம் தெய்வம் வந்து
தாயென இருந்து மக்களை வளர்த்துத்
தன் சுகம் பற்றி நனைந்திடல் இன்றி
மக்களின் சுகமே மனத்திடைக் கொண்டு
காத்திடல் வளர்த்திடல் அன்பின் பெருக்கே!
எத்தனை தியாகம்! எத்தனை பொறுமை!
எல்லாம் குடும்பம் வாழ்ந்திடற் கென்றே!
மண்ணகம் வந்த தெய்வம் மீண்டும்
விண்ணகம் அடைதல் இயல்பே எனினும்
தாயின் பிரிவு தந்திடும் துன்பம்
வாழ்வெலாம் தொடரும் துன்பமே அன்றோ?

### அழகு சேர்ப்பவை

*கைக்கு அழகு - நன்கொடை*

*தலைக்கு அழகு - பெரியோர் பாதசேவை*

*முகத்திற்கு அழகு - உண்மையான சொல்*

*புயங்களுக்கு அழகு - ஒப்பற்ற பராக்கிரமம்*

*மனதிற்கு அழகு - நல்லொழுக்கம்*

*செவிக்கு அழகு - நல்லசாத்திரங்களைக் கேட்டல்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை sri lanka

- ❊ தேசியப்பறவை - காட்டுக்கோழி
- ❊ தேசிய மரம் - நாகமரம் **(iron wood)**

  இது 1986 மாசி 26இல் தேசியமரமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

- ❊ தேசியமலர் - நீலோற்பல மலர் **(waterlilly)**

  இது 1986மாசி22இல் தேசியமலராகப் பிரகடனப்படுத்தப்பட்டது

- ❊ தேசிய விளையாட்டு - கரப்பந்தாட்டம் **(volley ball)**
- ❊ தேசிய கீதத்தை இயற்றியவர் - கலாசூரி ஆனந்த சமரக்கோன்
- ❊ தமிழில் மொழி பெயர்த்தவர் - முதுதமிழ்ப்புலவர் மு.நல்லதம்பி

  (1950ம் ஆண்டு)

- ❊ ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் - C.W.W.கன்னங்கரா
- ❊ மிக நீண்ட நதி - மகாவலிகங்கை
- ❊ மிகவுயர்ந்த மலை - பேதுறுதாலகால மலை
- ❊ மிகவுயர்ந்த நீர்வீழ்ச்சி - பம்பரகந்த
- ❊ கண்ணைக்கவரும் அழகான நீர்வீழ்ச்சிகள் - தியலுமை துன்கிந்த
- ❊ மிகப்பெரிய காடு - சிங்கராஜவனம்
- ❊ மிகப்பெரிய பூங்கா - பேராதனைப் பூங்கா
- ❊ இயற்கைத் துறைமுகம் - திருகோணமலை
- ❊ தலை நகரம் - ஸ்ரீஜெயவர்த்தனபுரம்
- ❊ புனிதவெள்ளரசு மரம் நாட்டப்பட்டநகரம் - அநுராதபுரம்
- ❊ அமைந்துள்ள கண்டம் - ஆசியா
- ❊ அமைந்துள்ள சமுத்திரம் - இந்து சமுத்திரம்
- ❊ மாகாணங்களின எண்ணிக்கை - 09
- ❊ மாவட்டங்களின் எண்ணிக்கை - 25
- ❊ சுதந்திரம் அடைந்தது - 1948-02-04
- ❊ முதற் பிரதமமந்திரி - டி.எஸ்.சேனநாயக்க
- ❊ தேசியக்கொடி - வாளேந்தியசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசியக்கொடியில் உள்ள சின்னங்கள்

## நிறங்கள் உணர்த்துபவை

❊ சிங்கம் - உடல் வலிமை மனோவலிமை மிக்கது தனக்கு பொருத்தமற்றதை செய்யாது.

❊ வாள் - வீரம் அநீதிக்கெதிரான போராட்டம்

❊ அரசமிலைகள் நான்கு தர்மஉபதேசம்

01) மெத்தா - ஒற்றுமையைப் பலப்படுத்தல்.

02) கருணா - துன்பத்திலிருந்து நீங்குதல்

03) முதிதா - பிறரிடம் அநுதாபம் காட்டல்

04) உபேக்கா - எளிமை சகிப்புத்தன்மை

❊ சிவப்பு - சிங்களவர்

❊ செம்மஞ்சள் - தமிழர்

❊ பச்சை - முஸ்லீம்கள்

### அரச இலச்சினை

| அடையாளம் | வெளிப்படுத்தும் விடயம் |
|---|---|
| சிங்கம் | வீரம் |
| நிறைகலசம் | சௌபாக்கியம் |
| சூரியசந்திரர் | உலக நிலைப்பாடு |
| நெற்கதிர் | தன்னிறைவு |
| தர்மச்சக்கரம் | தர்மமும் நீதியும் |
| தாமரையிதழ் | தூய்மை |

❊ நெல் ஆராய்ச்சி நிலையம் - மகா இலுப்பலகாம

❊ தேயிலை ஆராய்ச்சி நிலையம் - தலவாக்கொல்லை

❊ இறப்பர் ஆராய்ச்சி நிலையம் - அகலவத்தை

❊ தென்னை ஆராய்ச்சி நிலையம் - லுணவில

❊ பறவைகளின் சரணாலயம் - குமண

❊ விலங்குகளின் சரணாலயம் - யால வில்பத்து

❊ குகை ஓவியம் - சிகிரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❇ சர்வதேச விமானநிலையம் அமைந்துள்ள இடம் - கட்டுநாயக்க
❇ இலங்கையின் முதல் தமிழ்ப்பத்திரிகை - உதயதாரகை
❇ இலங்கையின் முதல் சிங்களப்பத்திரிகை - சிங்களஹட
❇ இலங்கையின் முதல் ஆங்கிலப்பத்திரிகை - Colombo journal
❇ இலங்கையின் முதலாவது ஜனாதிபதி வில்லியம் - கோபல்லாவ

**தேசப்படம்**

❇ தேசப்படத்தில் பெருந்தெருக்களைக் காட்டுவதற்கு பயன் படுத்தப்படும் நியம நிறம் எது? சிவப்பு (Red)
❇ நதியைக்காட்ட பயன் படுத்தப்படும் நியம நிறம் எது? நீலம் (Blue)
❇ குளமொன்றின் அணைக்கட்டை காட்டுவதற்கு பயன் படுத்தப்படும் நியம நிறம் எது? கபிலம் மண்ணிறம் (Brown)
❇ புகையிரதப்பாதையைக் காட்டுவதற்கு பயன்படுத்தப்படும் நியம நிறம் எது? கறுப்பு (Black)
❇ சிறு வீதிகளைக் காட்டுவதற்கு பயன் படுத்தப்படும் நியம நிறம் எது? மஞ்சல் (Yellow)
❇ நிருவாக எல்லைகளைக் காட்டுவதற்கு பயன் படுத்தப்படும் நியம நிறம் எது? சிவப்பு (Red)

**வணிகம்**

❇ நுகர்வுக்கான வர்த்தகப் பொருட்களின் தரத்தினை உறுதிப்படுத்தும் இலங்கையின் இலச்சினை எது? SLS
❇ நுகர்வுக்கான வர்த்தகப் பொருட்களின் தரத்தினை உறுதிப்படுத்தும் சர்வதேச இலச்சினை எது? ISO

**கோள்கள்**

❇ ஞாயிற்றுத்தொகுதியில் மிகப் பெரிய கோள் எது? வியாழன்
❇ மிகச் சிறிய கோள் எது? புதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❊ பூமிக்கு அண்மையில் உள்ள கோள் எது? வெள்ளி

❊ செங்கோள் எனப்படும் கோள் எது? செவ்வாய்

❊ சுக்கிரன் எனப்படும் கோள் எது? வெள்ளி

## நோய்கள்

❊அயடீன் குறைபாட்டல் ஏற்படும் நோய் எது?

கண்ட மாலை /தொண்டை வீக்கம்

❊ இரும்புச்சத்து குறைபாட்டல் ஏற்படும் நோய் எது?

இரத்தச் சோகை

❊ உயிர்ச்சத்து A குறைபாட்டல் ஏற்படும் நோய் எது?

மாலைக்கண் தோல்வறண்டு போதல்

❊ உயிர்ச்சத்து C குறைபாட்டல் ஏற்படும் நோய் எது?

பல் எலும்பு ஆகியவற்றில் சீற்ற வளர்ச்சி ஸ்கேவி நோய்

## உயிரினங்கள்

❊ நத்தை முட்டையின் நிறம் என்ன? மஞ்சள்

❊ பல்லி முட்டையின் நிறம் என்ன? வெள்ளை

❊ டெங்கு நோயை பரப்பும் நுளம்பு எவ்வாறான நீரில் முட்டையிடும்?

தூய நீரில்

❊ இரவு வேளையில் நடமாடும் பிராணிகள்?

ஆந்தை வெளவால் நுளம்பு மின்மினிப்பூச்சி

❊ பூச்சியுண்ணித்தாவரங்கள் எவை?

கெண்டித் தாவரம் (நெப்பந்தீஸ்)துரொசீரா கிளிச்சாடிச் செடி யூற்றிக்குலெரியா.

❊ பூனை வயிற்றுக்கோளாறு ஏற்படும் போது உட்கொள்ளும் தாவரம்?

குப்பைமேனி

❊ நாய் வயிற்றுக்கோளாறு ஏற்படும் போது உட்கொள்ளும் தாவரம்?

பாலறுகு

❊ சிலந்திக்கு எத்தனை கால்கள்? எட்டு

❊ சிறகுகளுக்கு பதிலாக உரோமங்கள் உள்ள பறவை எது? கிவி

❊ மிகவும் மெதுவாக நகர்ந்து செல்லும் பிராணி எது? நத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* அழகிய கூடு கட்டும் பறவை எது? தூக்கணாங்குருவி
* நீரிலும் நிலத்திலும் வாழக்கூடியது?

தவளை, தேரை, சலமந்தரா, ஆமை, பாம்பு, முதலை

## தாவரங்கள்

* வித்து முளைப்பதற்குத் தேவையான காரணிகள் எவை?

தகுந்த வெப்பம், நீர், வளி

* பெருந்தோட்ட பயிர்கள் எவை? தேயிலை, இறப்பர், தெங்கு
* இரவு வேளைகளில் இலை சுருங்கும் தாவரங்கள் எவை?

அகத்தி தொட்டாச்சுருங்கி பொன்னாவரை

* இரவில் மலரும் பூக்கள் எவை? கடுபுல், மல்லிகை
* தனிப்பூக்கள் எவை? செவ்வரத்தை கொடித்தோடை றோசா
* கொத்தாக பூக்கும் பூக்கள் எவை?

(கொத்தாக பூக்கும் பூந்துணரைக் கொண்டவை)

மூக்குத்திப்பூண்டு சீதேவியார் செங்கழுநீர் சூரியகாந்தி

எட்டிதழ்ப்பு தொட்டாசிணுங்கி

* மிக விரைவாக முளைக்க கூடிய வித்துக்கள் எவை?

கடுகு பாசிப்பயறு கோவா அவரை சோயா

* வாழைப் பூவை நாடிவரும் பிராணி எது? அணில்
* தூரியம் பூவை நாடிவரும் பிராணி எது? வெளவால்
* வேர்மூலம் இனம் பெருகும் தாவரங்கள் எவை?

ஈரப்பலா கறிவேப்பிலை

## விளையாட்டுக்கள்

| விளையாட்டுக்கள் | வீரர்களின் எண்ணிக்கை |
|---|---|
| கரப்பந்து | 06 |
| உதைபந்து | 11 |
| துடுப்பாட்டம் | 11 |
| வலைப்பந்தாட்டம் | 07 |
| கூடைப்பந்தாட்டம் | 05 |
| கோற்ப்பந்தாட்டம் | 11 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❊ உள்ளக விளையாட்டுக்கள் எவை?

சதுரங்கம் கரம் மேசைப்பந்து பூப்பந்தாட்டம்

❊ கிராமிய விளையாட்டுக்கள் எவை?

பல்லாங்குளி சடுகுடு தாயம் கிட்டிப்புல் கிளித்தட்டு

❊ குறுந்தூர ஓட்டத்திற்குரிய முழுக்கட்டளைகளும் எவை?

குறிப்பிற்குச் செல் (On your mark)

ஆயத்தமாகு (Set)

ஓடு(Go)

**கண்டு பிடிப்புக்கள்**

❊ டைனமோ (Dynamo)-மைக்கல் பரடே

❊ குருதிச்சுற்றோட்ம் -வில்லியம் கார்வே

❊ மின்குமிழ் - தோமஸ் அல்வா டிடிசன்

❊ ஒட்சிசன்வாயு ஜோசப் பிறிஸ்லி

❊ சைகிள்-மக்மில்லன்

❊ தொலைபேசி அலெக்சாண்டர் கிரம்பெல்

❊ ரேடியோ மார்க்கோணி

❊ விசர்நாய்க்கடித்தடுப்பு மருந்து லூயிபாஸ்ரர்

## பொது அறிவு

### உலக நாடுகளின் சிறப்புப் பெயர்கள்.

| | |
|---|---|
| உலகத்தின் கூரை | - திபெத் |
| சூரியன் உதிக்கும் நாடு | - ஜப்பான் |
| நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு | - நோர்வே |
| நைல் நதியின் கொடை | - எகிப்து |
| சூரியன் மறையும் நாடு | - இங்கிலாந்து |
| இருண்ட கண்டம் | - ஆபிரிக்கா |
| லில்லிப் பூக்களின் நாடு | - கனடா |
| அதிகாலை அமைதி நாடு | - கொரியா |
| கங்காருகளின் நாடு | - அவுஸ்ரேலியா |
| உலகின் சர்க்கரைக் கிண்ணம் | - கியூபா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் | - | சுவிற்சலாந்து |
| ஐரோப்பாவின் காப்பகம் | - | பெல்ஜியம் |
| பொற்கோபுர நாடு | - | மியன்மார் (பர்மா) |
| ஐரோப்பாவின் தானியக் களஞ்சியம் | - | ஹங்கேரி |
| புனித நாடு | - | பலஸ்தீனம் |
| மரகதத் தீவு | - | அயர்லாந்து |
| ஐரோப்பாவின் நோயாளி | - | துருக்கி |

| மொழிகள் | | சிறப்புப் பெயர்கள் |
|---|---|---|
| தமிழ் | - | பக்தி மொழி |
| பிரெஞ்சு | - | காதல் மொழி |
| ஆங்கிலம் | - | வணிக மொழி |
| கிரேக்கம் | - | சட்ட மொழி |
| இத்தாலி | - | இசை மொழி |
| உருது | - | கவிதை மொழி |

## சர்வதேசக் குறியீடுகள்

| குறியீடு | | விளக்கம் |
|---|---|---|
| ஒலிவ் மரத்தின் இலை | - | சமாதானம் |
| மஞ்சள் கொடி | - | தொற்றுநோய் |
| சிவப்புச் சக்கரம் | - | வளர்ச்சி |
| வெண்புறா | - | சமாதானம் |
| கறுப்புக்கொடி | - | எதிர்ப்பு |
| சிவப்பு முக்கோணம் | - | குடும்பக்கட்டுப்பாடு |
| செஞ்சிலுவை | - | மருத்துவ உதவி |
| கறுப்புத்துணிப்பட்டி | - | துக்கம் |
| சிவப்பு விளக்கு | - | ஆபத்து |
| பச்சை விளக்கு | - | அநுமதி |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் பிரதான வீதிகள்

| | |
|---|---|
| $A_1$ | கொழும்பு - கண்டி |
| $A_4$ | கொழும்பு - மட்டக்களப்பு |
| $A_7$ | அவிஸ்ஸாவெல - இரத்தினபுரி |
| $A_9$ | கண்டி - யாழ்ப்பாணம் |
| $A_{10}$ | கண்டி - புத்தளம் |
| $A_{12}$ | புத்தளம் - திருகோணமலை |
| $A_{15}$ | மட்டக்களப்பு - திருகோணமலை |
| $A_{29}$ | வவுனியா - ஹொரவப்பொத்தான் |
| $A_{34}$ | மாங்குளம் - முல்லைத்தீவு |
| $A_{35}$ | பரந்தன் - முல்லைத்தீவு |

| திசைகள் | வீசும் காற்றுக்கள் |
|---|---|
| வடக்கு | வாடைக்காற்று |
| தெற்கு | தென்றற்காற்று |
| கிழக்கு | கொண்டல்காற்று |
| மேற்கு | கோடைக்காற்று |

உலகின் மிகச் சிறிய தேசிய கீதம் எது?

ஜப்பான் (நான்கு அடிகள்)

உலகின் மிகப் பெரிய தேசிய கீதம்?

கிரேக்க நாடு (128 அடிகள்)

உலகில் அதிகளவு மக்களால் தாய் மொழியாகப் பேசப்படும் மொழி எது?

மண்டாரின் (சீனா)

உலகில் அதிக சனத்தொகை கொண்ட நாடு எது?

சீனா

உலகில் மிகக் குறைந்த சனத்தொகை கொண்ட நாடு எது?

வத்திக்கான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் வெளிவந்த முதலாவது வரலாற்று நாவல் எது?

மோகனாங்கி

திருக்குறளை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டவர்?

G.U.போப்

எமது நல்வாழ்வு

01. எமது நல்வாழ்விற்கான


செயற்பாடுகள்

சூரியநமஸ்காரம்

தியானம்

யோகாசனம்

02. சூரிய நமஸ்காரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாடுகளின் பயன்கள்

மனஅமைதி கிடைக்கும்

சுறுசுறுப்பும் மகிழ்ச்சியும் ஏற்படும்

நற்பண்புகள் விருத்தியடையும்

உடலும் உள்ளமும் ஆரோக்கியமடையும்

04. சூரியநமஸ்காரம், தியானம் செய்வதற்கு உகந்தநேரம் -காலை

05. தியானத்தின் படி நிலைகள்

1. உடலைத் தளர்த்துதல்
2. மனதைத் தளர்த்துதல்
3. மனவுறுதி
4. பிரார்த்தனை
5. மலர்வு

06. நாம் வீட்டுக்காக ஆற்றவேண்டிய கடமைகள்

❁பெற்றோரின் வேலைகளில் உதவுதல்

❁வீட்டில் உள்ள முதியோருக்கும் நோய் வாய்ப்பட்டவர்க்கும் உதவுதல்

❁வீட்டை சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருக்க உதவுதல்

❁நுளம்புகள் பெருகாதவாறு அயற்சூழலை வைத்திருக்க உதவுதல்

❁வீட்டுத் தோட்டம் பூந்தோட்டம் போன்றவற்றிற்கு நீர் ஊற்றி நேர்த்தியாக வைத்திருக்க உதவுதல்

பாடசாலையில் நாம் செய்ய வேண்டிய கடமைகள்

❁வகுப்பறையையும் சூழலையும் சுத்தமாக வைத்திருத்தல்

❁சகமாணவர்களுடன் நட்புறவுடன் பழகுதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ பாடசாலை வளங்களைப் பாதுகாத்தல்

❋ இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் பங்கேற்றல், பங்களிப்புச் செய்தல்

❋ பாடசாலைக்கொடி, பாடசாலைக்கீதம், ஆசிரியர்களுக்கு மதிப்பளித்தல்


எமது நாட்டிற்காகச் செய்ய வேண்டிய கடமைகள்

❋ இலவசபாட நூல்களைப் பாதுகாத்து பயன்படுத்திப் பின்வரும் சகோதரர்களுக்கு பயன்படுத்தக் கூடியவாறு கொடுத்தல்

❋ தேசிய கொடி, தேசிய கீதம் என்பவற்றிக்கு கௌரவமளித்தல்

❋ அரசபொது இடங்களைப் பாதுகாத்து சுத்தமாக வைத்திருத்தல்


## 09. முகபாவங்கள்



அநுதாபம்



கோபம்



மகிழ்ச்சி



பயம்






துக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்மைச் சூழவுள்ள பிராணிகள்

| பிராணிகள் | சிறப்பியல்புகள் |
|---|---|
| ★ வெளவால்  | ★ பறக்கும் முலையூட்டி<br>★ பற்களுடைய அலகு<br>★ தலை கீழாக தூங்கும்<br>★ உணவு உண்ணும்<br>★ எதிரொலி மூலம் உணவு தேடும்<br>★ கழிவுகளை வாய்மூலம் அகற்றும் |
| ★ கழுகு/ பருந்து  | ★ உயரப்பறத்தல்<br>★ கால்களால் இரையைத் தூக்கிச் செல்லும்<br>★ கூர்மையான பார்வை<br>★ வானில் வட்டமடிக்கும் |
| ★ சிலந்தி  | ★ எட்டுக்கால் உடையது.<br>★ எட்டுக் கண்கள் உண்டு.<br>★ உமிழ் நீரால் வதிவிடம் அமைக்கும். |
| ★ தீக்கோழி  | ★ வேகமாக ஓடும்.<br>★ மிகப் பெரிய முட்டை இடும். |
| ★ முயல்  | ★ செவியை அசைத்து சிறிய ஒலியையும் கேட்கும்.<br>★ பின்னங்கால் நீளமானது.<br>★ காதில் பிடித்து தூக்குவர்.<br>★ பஞ்சு போன்ற மேனி |
| ★ கங்காரு  | ★ வயிற்றில்பை உண்டு.<br>★ பின்னங்கால் நீளமானது. |
| ★ யானை  | ★ கடவாய் பற்கள் வெளியில் நீண்டு வளர்தல்.<br>★ தும்பிக்கை உண்டு.<br>★ ஞாபகசக்தி அதிகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஓணான்



★ நாக்கு நீட்டி உணவு பிடித்தல்
★ நிறத்தை மாற்றுதல்
★ இறப்பர் பந்து போன்ற முட்டை இடும்.

★ தவளை



★ நச்சுத் தோலுடையது
★ பின்னங்கால் நீளமானது
★ நாக்கை நீட்டி உணவு பிடிக்கும்
★ ஈருடகவாழி

★ தேனீ



★ மெழுகினால் அறுகோணவடிவ கூடு அமைக்கும்.
★ சுறு சுறுப்பானது.
★ உணவு சேமிக்கும்
★ கூட்டமாக வாழும்

★ பூனை



★ கால் நகங்கள் தேவைக்கு ஏற்ப நீட்டக் கூடியது.
★ மோப்பசக்தி அதிகம்.
★ சுத்தமான பிராணி

★ பல்லி/ அறணை

★ வாலை அறுத்து விட்டு எதிரியிடமிருந்து தப்பும்.



**02. கால்கள் இல்லாத பிராணிகள்**

பாம்பு, நத்தை, அட்டை, மண்புழு, மீன், புழுக்கள்

**03. ஈருடகவாழி என்பது**

நீரிலே இனத்தைப் பெருக்க முட்டை இட்டு நீரிலும் நிலத்திலும் வாழ்வது.

உ+ம் :- தவளை, தேரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீரில் நீந்தக்கூடியது**

தாரா, வாத்து, நீர்க்காகம், மீன், தவளை

**பசுப்பாலில் தயாரிக்க கூடியவை**

வெண்ணெய், நெய், பாற்கட்டி, பால்மா, யோக்கட், ஐஸ்கிறீம், பனீர்

**பிராணிகளால் சூழலுக்கு கிடைக்கும் நன்மைகள்**

பயிர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் பூச்சி புழு நத்தைகளை உண்ணுதல் (செண்பகம்)

வித்துக்கள் பரம்பல்

மகரந்த சேர்க்கைக்கு உதவுதல்

சுற்றாடலிலுள்ள அழுக்கை அகற்றுதல்

மண்ணை வளப்படுத்துதல்

**செல்லப்பிராணிகளாக வளர்க்கப்படுபவை**

லவ்பேட்ஸ், நாய், பூனை, கிளி, மைனா, அழகுமீன்கள்

**ஈரூடகவாழிகள்**

தவளை, தேரை, சலமந்தரை

**எமது நாட்டிற்கே உரித்தானவை**

பறவைகள் - நரைப்புளுணி, செம்முகப்பூங்குயில், நாகணவாய், காட்டுச்செண்பகம், காட்டுக்கோழி, நீலப்புள்

முலையூட்டிகள் - மரநாய், கருங்குரங்கு, சுண்டெலி, சருகுமான், மரஅணில்

ஈரூடக வாழிகள் - மரத்தேரை, சிவப்புக்கழுத்துத்தவளை

மீன்கள் - கோழிக்கொண்டை, சேல்கொண்டை, அழகிய சொர்க்கம், புள்ளிக்கோட்டி

பாம்புகள் - பச்சைப்பாம்பு நீர்ப்பாம்பு

வண்ணத்துப்பூச்சிகள் - ட்ரீநம்ப், ஸ்ரீலங்காபர்ட்விங்


**பிராணிகளால் சமூகத்திற்கு கிடைக்கும் நன்மைகள்**


- நாய் - பாதுகாப்பு வழங்கல்
- பூனை - மனதிற்கு இதமளித்தல்
- மீன்கள் - சூழலுக்கு அழகூட்டல் மனதிற்கு இதமளித்தல்
- பறவைகள் - அவதானித்தல் உளத்திருப்தி ஏற்படுதல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவையின் பகுதிகள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சுற்றாடலில் நாம் காணும் பூச்சிகள்




1. வண்டு
2. வண்ணத்துப்பூச்சி
3. பேன்
4. ஈ
5. வெட்டுக்கிளி
6. அந்துப்பூச்சி
7. கும்பிடுபூச்சி
8. கரப்பான்
9. மூட்டைபூச்சி
10. பூசணிவண்டு
11. தும்பி
12. தேனீ
13. நுளம்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## முள்ளந்தண்டு இல்லாதவை







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை வட்டம்




## மீனின் பகுதிகள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***"Death leaves a heartache no one can heal,***
***Love leaves a memory no one can steal"***



**என் கண்ணில் பட்ட உன் முதல் படம்**
**என் நெஞ்சைக் கவரும் உன் நிழல் படம்**
**அன்புக்கணவர் விஜயகுமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

"மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு"

திருக்குறள்


எமது பாசமிகு தாயார் சிவபதமடைந்த செய்தி கேட்டு உடன் வந்து உதவிக்கரம் நீட்டிய உற்றார் உறவினர் நண்பர் அயலவர்க்கும் அல்லலுற்று ஆற்றாது நின்ற போது ஆறுதல் கூறிய அன்பர்களுக்கும் தந்தி தொலை பேசி மூலம் அநுதாபம் தெரிவித்த அன்பு உள்ளங் களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்து மலர் அஞ்சலி செலுத்தியோர்க்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசும் மூலம் அநுதாபம் தெரிவித்தோருக்கும் துயரில் சரீர உதவி களைச் செய்த உத்தமர்க்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித் தோருக்கும் இம்மலரைச்சிறப்புற அச்சிட்டு வழங்கிய சுன்னாகம் மகிந்தன் கணனி அச்சகத்தினருக்கும் உளங்கனிந்த நன்றிகளைச் சொன்மாலையாக்கிச் சொரிகின்றோம்.

நன்றி

இங்ஙனம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளும் நானும்

பிறப்பின் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்!
படிப்பெனச் சொல்வது யாதெனக்கேட்டேன்
படித்துப்பாரென இறைவன் பணித்தான்!
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்!
அன்பெனப்படுவது என்னெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்!
பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!
மனையாள் சுகமெனில் யாதெனக்கேட்டேன்
மணந்துபாரென இறைவன் பணித்தான்!
பிள்ளை என்பது யாதெனக் கேட்டேன்
பெற்றுப் பாரென இறைவன் பணித்தான்!
முதுமை என்பது யாதெனக் கேட்டேன்
முதிர்ந்து பாரெனஇறைவன் பணித்தான்!
வறுமை என்பது என்னெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்!
இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்!
அனுபவித்தேதான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன் எனக்கேட்டேன்!
ஆண்டவன் சற்றே அருகி நெருங்கி
அனுபவம் என்பதே நான்தான் என்றான்!

- கவிஞர் கண்ணதாசன் -

மகிந்தன் கணினி அச்சகம்
சுன்னாகம்
0776664210

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org